முருகப்பெருமான் துணை

**மகான் அங்காரக பகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.04.2023**, வியாழக்கிழமை

1. ஏழ்மையை விரட்டி கலியினில்
ஏழைக்கு இரங்கும் ஞானியே
ஊழ்போக்கும் மாதவசியே
உயர்ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தகர் திங்கள்
குறைவிலா சப்தம திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 07 ம் நாள், 20.04.2023 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு அங்காரக பகவான் யானும்
3. யானுரைக்க உலக மக்கள்
உயர் தன்மை வீரம்பெற
ஞானதேசிகன் திறன்மிக்க
ஞான வழிகளை ஏற்க வேண்டும்
4. வேண்டி வேலவனார் வழிபாடு
விடாது ஞானிகள் பூசை
தொண்டு கலந்திட்ட வண்ணம்
தொடர்ந்து மக்கள் அரங்கன்
5. அரங்கன் திருவடி பற்றிவர
அறத்தின் வழிகளை ஏற்றுவர
வரங்களாக சக்திகள் கூடி
வாழும் காலம்தனில் உலகோர்
6. உலகோர் தெய்வ அனுகூலம்
உயர்வாய் கிட்டித் தெளிந்து
தலைவன் முருகனே எனும்
தனித்துவம் தன்னுள் கூடி
7. கூடியே உலகோர் சிறப்பர்
குருமார்க்கம் விட்டு அகலா
நாடியே ஞானவான்களாக
நானிலத்தில் ஞானிகள் ஆவர்

8. ஆகவே பிறப்பின் சூட்சுமமும்
அழியாமை எனும் பலமும்
வகையான தர்ம சக்தியும்
வல்லமையும் கண்டு திளைப்பர்
9. திளைக்கவே கலியுகம் தன்னில்
தேசிகன் தொண்டர்களென
உலகினில் அடையாளம் கண்டு
உத்தமமாய் வாழும் மக்கள்
10. மக்கள் அனைவருமே அரங்கன்
மகத்துவத்தால் ஆற்றல் கூடி
தேக்கமின்றி மேலவர் ஆசிபட
தெரிவிப்பேன் தேற்றம் கண்டு
11. கண்டுமே உலகினை மாற்றும்
கந்தவேலவன் சக்திகளாகி
தொண்டுவழியே மாற்றம் புரிவர்
தெரிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–